கொரோனாவில் இருந்து மீண்ட 29 தீயணைப்பு வீரர்கள் பிளாஸ்மா தானம்

அமைச்சர் விஜயபாஸ்கர் பாராட்டி சான்றிதழ் வழங்கினார்

சென்னை, செப்.2

கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்த தீயணைப்பு வீரர்கள் 29 பேர் பிளாஸ்மா தானம் செய்தனர். அவர்களை அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் பாராட்டி சான்றிதழ் வழங்கினார்.

தமிழகத்தில் சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க பிளாஸ்மா வங்கி செயல்பட்டு வருகிறது. இந்த பிளாஸ்மா வங்கியில் கொரோனா நோய் தொற்றில் இருந்து மீண்ட பலர் பிளாஸ்மா தானம் செய்து வருகின்றனர். இந்த நிலையில் கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து மீண்ட தீயணைப்பு வீரர்கள் பிளாஸ்மா தானம் செய்யும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இதில் தமிழக தீயணைப்பு துறையை சார்ந்த 29 வீரர்கள் தங்களது ரத்தத்தில் உள்ள பிளாஸ்மாவை தானம் செய்தனர். இந்த நிகழ்ச்சியில் சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் மற்றும் தீயணைப்பு துறை இயக்குனர் டி.ஜி.பி. சைலேந்திரபாபு ஆகியோர் பார்வையிட்டனர். இதைத்தொடர்ந்து பிளாஸ்மா தானம் செய்த தீயணைப்பு வீரர்களை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் பாராட்டி, அவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினார்.

அதன்பின்னர் அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் நிருபர்களிடம் பேசுகையில், "போலீசாரை தொடர்ந்து தீயணைப்பு வீரர்கள் பிளாஸ்மா தானம் செய்துள்ளனர். இதுவரை 140 பேரிடம் இருந்து பிளாஸ்மா தானமாக பெறப்பட்டு, 225 பேருக்கு பிளாஸ்மா தானமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் தமிழகத்தில் மதுரை, தஞ்சாவூர் உள்ளிட்ட மாவட்டங்களில் பிளாஸ்மா வங்கி அமைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது." என்று கூறினார்.

இந்த நிகழ்வின்போது தீயணைப்பு துறை வடமண்டல இணை இயக்குனர் என்.பிரியா ரவிசந்திரன், ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை 'டீன்' டாக்டர் தேரணிராஜன், ரத்த வங்கித் தலைவா் சுபாஷ் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

என்.எல்.சி.விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பங்களுக்கு நிவாரண நிதி: கலெக்டர் சந்திரசேகர் சாகமூரி வழங்கினார்

கடலூர், செப். 2–

கடலூர் மாவட்டம் நெய்வேலி அனல் மின் நிலையத்தில் விபத்தில் உயிரிழந்த குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கான காசோலை கலெக்டர் சந்திரசேகர் சாகமூரி வழங்கினார்.

கடந்த 01.07.2020 அன்று விருத்தாச்சலம் வட்டம் அம்மேரி கிராமத்தில் உள்ள நெய்வேலியில் என்.எல்.சி அனல் மின் நிலையத்தில் பாய்லர் வெடித்த விபத்தில் 6 பேர் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டனர். மேலும் சிகிச்சை பலனின்றி 8 பேர் இறந்துவிட்டனர். இறந்துவிட்ட 14 பேருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.42 லட்சம் வரப்பெற்றது.

முதலமைச்சர், கடலூர் மாவட்டத்தில் நடைபெற்ற பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகள் மற்றும் கொரோனா நோய் தடுப்பு குறித்து ஆய்வுக்கூட்ட நிகழ்ச்சியில், நெய்வேலியில் என்.எல்.சி அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட விபத்தில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த ஒருவருக்கு ரூ.3 லட்சத்துக்கான காசோலையினை வழங்கினார்.

முன்னதாக தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் 04.07.2020 அன்று நெய்வேலியில் என்.எல்.சி அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த 6 பேரின் குடும்பங்களுக்கு தலா ரூ.3 லட்சம் வீதம் ரூ.18 லட்சத்துக்கான காசோலையினை வழங்கினார்.

அதன் தொடர்ச்சியாக நெய்வேலியில் என்.எல்.சி அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட விபத்தில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த 7 பேரின் குடும்பங்களுக்கு ரூ.3 லட்சம் வீதம் ரூ.21 லட்சத்துக்கான காசோலையினை கலெக்டர் சந்திரசேகர் சாகமூரி கலெக்டர் அலுவலகத்தில் வழங்கினார்.

மேலும் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கான ஆணை வரப்பெற்றவுடன் அவரது குடும்பத்தினருக்கு வழங்கப்படும்.

இந்நிகழ்ச்சியின்போது, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) எஸ். பரிமளம் (பொறுப்பு) உடனிருந்தார்.

ஆரணி பச்சையம்மன் ஆலயத்தில் அமைச்சர் சேவூர் ராமச்சந்திரன் ஆய்வு

ஆரணி, செப்.2–

ஆரணி அடுத்த முனுகபட்டு கிராமத்தில் உள்ள ஸ்ரீ பச்சையம்மன் ஆலயத்தில் அமைச்சர் சேவூர் ராமச்சந்தின் ஆய்வு செய்தார்.

தமிழகம் முழுவதும் கோவில்கள் திறக்க அனுமதிக்கபட்ட நிலையில் ஆரணி அருகே உள்ள ஸ்ரீபச்சையம்மன் ஆலயத்தில் இந்து சமய அறநிலை துறை அமைச்சர் சேவூர் எஸ்.ராமச்சந்தின் நேரில் சென்று சாமிதரிசனம் செய்துவிட்டு சமூக இடைவெளி உள்ளிட்ட அரசின் பாதுகாப்பு நடைமுறைகளை பக்தர்கள் பின்பற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.

உலகளவில் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக 144 ஊரடங்கு உத்தரவு இன்று முதல் தடை உத்தரவு நீங்கி தமிழகம் முழுவதும் உள்ள கோவில்களை அரசின் சில நடைமுறைகள் கடைபிடிக்கபட்டு திறக்கலாம் என்று முதல்வர் எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டார். அதனைத்தொடர்ந்து தமிழக முழுவதும் உள்ள கோவில்கள் திறக்கபட்டது.

இந்நிலையில் திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அடுத்த முனுகபட்டு கிராமத்தில் மிகவும் பழமைவாய்ந்த ஆலயமான அருள்மிகு ஸ்ரீ பச்சையம்மன் ஆலயத்தில் அமைச்சர் சேவூர் ராமச்சந்தின் நேரில் சென்று சாமி தரிசனம் செய்து ஆய்வு செய்தார்.

அதனையடுத்து கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு முககவசம், 6 அடி சமூக இடைவெளி கடைபிடிக்கவும், கை, கால்களை, தண்ணீரில் சுத்தமாக கழுவி, கிருமிநாசினி தெளிக்கபட்டு, தெர்மல் ஸ்கேனர் மூலம் உடல்வெப்பம் கண்டறிந்து சாமி தரிசனம் செய்ய பக்தர்களை கோவிலுக்குள் அனுமதிக்க வேண்டும். அரசின் பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றி கோவிலுக்குள் வர பக்தர்களுக்கு கோவில் நிர்வாகம் அறிவுறுத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.

உடன் ஆவின் துணை சேர்மன் பாரி.பாபு, ஒன்றிய செயலாளர்கள் கொளத்தூர் திருமால், பெருங்களத்தூர் மகேந்திரன், அருகாவூர் ரங்கநாதன், சீஷமங்கலம் கிளை செயலாளர் சுகுமார், இ.பி. நகர் குமார், கோவில் ஆய்வாளர் சத்யா, மேலாளர் திவாகரன், ஜெகதீசன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

ராகு–கேது பெயர்ச்சி: செவிலிமேடு ஸ்ரீகைலாசநாதர் கோவிலில் சிறப்பு பூஜை

காஞ்சீபுரம், செப். 2–

காஞ்சீபுரம் அருகே செவிலிமேடு ஏரிக்கரை பகுதியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீகைலாசநாதர் கோவிலில் உள்ள ராகு–கேது சன்னதியில் ராகு–கேது பெயர்ச்சியை யொட்டி சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது.

சுவாமிகள் வண்ண வண்ண வாசனை மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு கற்பூர தீபாராதனைகள் காட்டப்பட்டது. முன்னதாக கோவிலில் யாகசாலை பூஜைகள், கலசபுறப்பாடு நடைபெற்றது. இதில் பக்தர்கள் சமூக இடைவெளியுடன் சாமி தரிசனம் செய்தனர். வந்திருந்த பக்தர்களுக்கு கோவில் அர்ச்சகர் ராஜாப்பா குருக்கள் விபூதி பிரசாதங்களை வழங்கினார்.

காஞ்சீபுரம் அப்பாராவ் முதலியார் தெருவில் உள்ள பிரசித்தி பெற்ற மகாலிங்கேஸ்வரர் கோவிலில் ராகு–கேதுவிற்கென தனி சன்னதிகள் உள்ளது. இக்கோவிலில் ராகு–கேது பெயர்ச்சியையொட்டி சுவாமிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது.

முன்னாள் உயர் போலீஸ் அதிகாரி பாலன், மாவட்ட மருத்துவணி நிர்வாகி மெடிக்கல் தீனா, கவிஞர்கள் கூரம் துரை, எஸ்.முருகவேள், ஆகியோர் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை ஆன்மீக பிரமுகர் புருஷோத்தம்மன் செய்திருந்தார்.

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS
(Appllate Jurisdiction)
C.M.A.No.2909/2017
against
M.C.O.P.No.1954/2007
(On the file of the Motor Accident Claims Tribunal, Additional Subordinate Court No.1, Cuddalore)

ICICI Lobard General Insurance Co.Ltd.,
Appellant
Vs
S.Iyanar & Another
Respondents

To S.Sathish Kumar
S/o.Ramachandran
No.143, Railway Station Road,
K a v a r a i p e t t a i ,
Gummidipoondi–601206.

Take notice that the appeal filed by theICICI Lobard General Insurance Co.Ltd., and you are arrayed as 2nd Respondent in the above Civil Miscellaneous Appeal. The Hon'ble High Court ordered Paper Publication returnable by 21.09.2020. You are requested to appear either in person or through counsel before the Hon'ble High Court of Madras, on 21.09.2020 failing which the matter will be heard and decided in your absence.

R.Sree Vidhya
Counsel for Appellant

BEFORE THE COURT OF HON'BLE SUB ORDINATE JUDGE AT KANCHEEPURAM
H.M.OP. No. 79 OF 2019

T.Lakshmipathi alias Karthick
S/o Thiruvanakarsu,
No.5, 1st street, Mananchery
Saravana Nagar, Kuntrathur,
Chennai -69
Petitioner
-Vs-
G.SHANTHI
D/o. Gopinath, Plot no.86,
Thirumalai nagar, Kundrathur,
Chennai-69.
Respondent

To
G.SHANTHI
D/o. Gopinath, Plot no.86,
Thirumalai nagar, Kundrathur,
Chennai-69.

Please take notice that in the above matter The Hon'ble Sub ordinate Judge Kancheepuram order private notice to you returnable on 17-09-2020 in the above matter, please make convenient yourself and present on the above said court at 10.30 a.m. either yourself or pleader, failing which the matter will be decided In your absence.

M.Kumar
Counsel for Petitioner

சார் ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்ட நிர்வாக நடுவர் நீதிமன்றம், கள்ளக்குறிச்சி.
பி.இ.சி.ப.வ.எண்:அ6/337/2020

ஏழுமலை த/பெ.நடேசன்
வடதொரசலூர் கிராமம்,
கள்ளக்குறிச்சி வட்டம்.
கள்ளக்குறிச்சி மாவட்டம்.
..... மனுதாரர்

அறிவிப்பு;

மனுதாரர் ஏழுமலை என்கிற நான், எனது மகன் சுதாகர் என்பவர் வடதொரசலூர் கிராமத்தில் 07/02/2001 ல் பிறந்தார் என்பதை கவனக் குறைவாக பதிவு செய்யாமல் இருந்து விட்டபடியால் மேற்படி எனது மகன் சுதாகர் என்பவரின் பிறப்பு சான்று கல்லூரி படிப்பிற்குத் தேவைப் படுவதால் மேற்படி எனது மகன் சுதாகர் என்பவரின் பிறப்பு சான்று கேட்டு மேற்படி நீதிமன்றத்தில் மனு கொடுத்துள்ளேன். இம்மனுவின் மீது எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது எழுத்து மூலமோ ஆஜராகி தங்களுடைய ஆட்சேபனைகளை இந்த விளம்பரம் வெளியான 15 நாட்களுக்குள் தெரிவித்துக் கொள்ள வேண்டும். தவறினால் எனது மனுவின் மீது எவ்வித ஆட்சேபனையும் இல்லை என மேற்படி நீதிமன்றத்தால் ஒரு தலைபட்சமாக சான்று வழங்க உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

ந.ஏழுமலை,
மனுதாரர்.

மேன்மைமிகு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் விழுப்புரம்
அ.தி.மு.அ 4/334/2020
நாள் 18/08/2020

R. பிரபாகரன் S/o ரத்தினம்,
14, சர்வேசன் தெரு
கீழ்பெரும்பாக்கம், விழுப்புரம்.
மனுதாரர் தெரிவிக்கும் பொது அறிவிப்பு

மனுதாரர் R. பிரபாகரன் S/o ரத்தினம் என்ற நான், எனது தாத்தா பெருமாள் கவுண்டர் என்பவர் கடந்த 01/03/1982 அன்று மேற்படி ஊரில் இறந்ததை, அப்போது விபரம் தெரியாத காரணத்தால் இறப்பு பதிவு செய்யாமல் விடுபட்டுவிட்டது, தற்பொழுது அவரது இறப்பு சான்று வேண்டி மேற்படி விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 தினங்களுக்குள் மேற்படி நீதிமன்றத்தில் எழுத்து மூலமோ, நேரிலோ ஆஜராகி தெரி விக்கலாம்,தவறினால் இம்மனுவின் எவருக்கும் ஆட்சேபனை இல்லை என ஒருதலை பட்சமாக ஏற்கப்பட்டு உத்தரவு ஆகிவிடும் என்பதை இதன் மூலம் அறியவும்.

R. பிரபாகரன்
மனுதாரர்

KUMBHAT FINANCIAL SERVICES LIMITED

(CIN: L65991TN1993PLC024433)
Kumbhat Complex, 5th Floor, 29, Rattan Bazaar, Chennai - 600 003.
Website: www.kumbhatfinancialserviceslimited.com

Dear Members,

1. Notice is hereby given that the 27th Annual General Meeting of the Company will be convened at 10.00 A.M IST, on 28th September 2020 through video conferencing ("VC")/Other Audio Visual means ("OAVM") facility to transact the business as set out in the notice which will be circulated for convening the AGM. In view of the continuing COVID-19 pandemic and in compliance with the applicable provisions of the Companies Act, 2013 and rules framed thereunder and the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 read with General Circular Nos. 14/2020, 17/2020 and 20/2020 dated 8th April, 2020, 13th April 2020 and 5th May, 2020, respectively, issued by the Ministry of Corporate Affairs ("MCA Circular(s)") and Circular No. SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79 dated 12th May, 2020 issued by the Securities and Exchange Board of India ("SEBI Circular"), the Board of Directors have decided to convene and conduct the AGM through VC/ OAVM facility without the physical presence of the Members at a common venue.
2. The Notice of the 27th AGM and the Annual Report for the year 2020, including the Financial Statements for the year ended 31st March, 2020 ("Annual Report") will be sent only by e-mail to all those members, whose e-mail addresses are registered with the Company/RTA or with their respective Depository Participants ("DP"), in accordance With the MCA Circular(s) and the SEBI Circular as mentioned above. Members can join and participate in the 27th AGM through VC/OAVM facility only. The instructions for joining the 27th AGM and the manner of participation in the remote e-voting for the 27th AGM are provided in the Notice of the 27th AGM. Members participating through the VC/OAVM facility shall be counted for the purpose of reckoning the quorum under section 103 of the Companies Act, 2013.
3. Notice of the 27th AGM and the Annual Report will be made available on the website of the Company i.e., www.www.kumbhatfinancialserviceslimited.com and the website of Stock Exchange in which the Company's equity shares are listed i.e., BSE Limited
4. Members holding shares in physical form who have not registered their e-mail addresses with the Company/RTA can obtain Notice of the 27th AGM, Annual Report and/or login details for joining the 27th AGM through VC/OAVM facility including remote e-voting, by sending scanned copy of the following documents by e-mail to cs@kumbhatfinancialserviceslimited.com
   a. Request e-mail mentioning your name, folio number and complete address
   b. Copy of the Share Certificate (Front & Back)
   c. Self-attested Scanned copy of the PAN Card; and
   d. Self-attested scanned copy of any document (Such as. Aadhar card, Driving License, Voter 'ID, Passport) in support of the address of the members as registered with the company.
5. Members who are holding shares in physical form are requested to intimate such details to Cameo Corporate Services Ltd, "through web module https://investors.cameoindia.com/, wherein the shareholders can log in and register the Email ID and mobile number against the folio number in which they hold shares.
6. Members holding shares in demat form can update their e-mail address & bank account details by submitting a request to the concerned Depository Participant.
7. Considering the above, we urge the shareholders to update their email ID, Bank Account details & PAN with the Company / RTA / Depository Participant to ensure receipt of the Annual Report. Dividend and/or any other consideration and other communications from the Company.
8. Details of remote evoting and book closure intimation

Sl No.	Particulars
1	The voting through electronic means will commence from September, 25, 2020 at 9:00 AM I.S.T
2	The voting through electronic means will end on September 27, 2020 at 5:00 P M I.S.T
3	The voting shall not be allowed beyond the end of the voting time period i.e. September 27, 2020 after 5:00 P.M I.S.T
4	Pursuant to Section 154 of the Companies Act, 1956 and Section 91 of the Companies Act, 2013 and the applicable provisions of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 and the amendments made there under, the notice is hereby given that Register of members and Share transfer books will remain closed from September, 21 2020 to September, 28 2020 (both days inclusive) for the purpose of AGM.

The above information is being issued for the information and benefit of all the members of the Company and in Compliance with the MCA Circular(s) and SEBI Circular.

Kumbhat Financial Services Limited,
SANJAY KUMBHAT
DIN: 03077193
Managing Director

Place : Chennai
Date : 01.09.2020

ஸ்ரீ சர்வராயா சுகர்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 12, எத்திராஜ் சாலை, எழும்பூர், சென்னை 600 008.
தொலைபேசி: 044-28276182 மின்னஞ்சல் ஐடி: chennai@srisarvarayasugars.in
இணையதளம்: www.srisarvarayasugars.in CIN: U01115TN1956PLC003435

62வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மின்னணு வாக்குப்பதிவு தகவல்

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்களை செயல்படுத்த கம்பெனியின் அறுபத்திரண்டாவது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) வியாழக்கிழமை, 24 செப்டம்பர் 2020 அன்று காலை 11.30 மணிக்கு காணொளி காட்சி (VC)/இதர ஒலி ஒளி சாதனங்கள் (OAVM) மூலமாக நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. கம்பெனி விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் வெளியிடப்பட்ட 5 மே 2020 தேதியிட்ட சுற்றறிக்கை, ஏப்ரல் 8, 2020 தேதியிட்ட மற்றும் ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட சுற்றறிக்கைகள் (கூட்டாக எம்சிஏ சுற்றறிக்கைகள் என்று குறிப்பிடப்படுகிறது) மற்றும் மே 12, 2020 தேதியிட்ட செபி சுற்றறிக்கையின்படி, கம்பெனி/டெபாசிட்டரிகளிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த உறுப்பினர்களுக்கு 2 செப்டம்பர் 2020 தேதியிட்ட வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பினை மின்னணு முறையில் கம்பெனி அனுப்பி உள்ளது. 2019–20 நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கையை கம்பெனியின் இணைய தளம் http://www.srisarvarayasugars.in மற்றும் NSDL இணையதளம் https://www.evoting.nsdl.comல் கிடைக்கும் மற்றும் அவற்றை படியிறக்கம் செய்து கொள்ளலாம்.

கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 108, அவ்வப்போது திருத்தப்பட்ட கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன் விதி 20 மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 44ன்படி NSDL–லினால் அளிக்கப்படும் மின்னணு வாக்குப்பதிவு (மின்னணு வாக்குப்பதிவு) மூலம் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அனைத்து தீர்மானங்கள் மீது உறுப்பினர்கள் தங்கள் வாக்குகளை பதிவு செய்வதற்கான வசதி அளிக்கப்படுகிறது. 17 செப்டம்பர் 2020 (''கட் ஆப் தேதி'') அன்று கம்பெனியின் செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனத்தில் அவர்கள் வைத்திருக்கும் பங்குகளின் விகிதத்தில் உறுப்பினர்களின் வாக்குரிமை இருக்கும்.

வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறுவதையொட்டி, செபி (எல்ஓடிஆர்) விதிகள் 2015ன் விதி 42ன்படி, உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள் வெள்ளிக்கிழமை 18 செப்டம்பர் 2020 முதல் வியாழக்கிழமை, 24 செப்டம்பர் 2020 முடிய(இரு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு திங்கட்கிழமை 21 செப்டம்பர் 2020 (இந்திய நேரப்படி காலை 9.00 மணி) தொடங்கி புதன்கிழமை, 23 செப்டம்பர் 2020 முடிய (இந்திய நேரப்படி மாலை 5.00 மணி) முடிவடைகிறது. இந்த காலத்தில் உறுப்பினர்கள் மின்னணு முறையில் வாக்களிக்கலாம். அதன்பின்னர் NSDL–லினால் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு நிறுத்தப்படும். VC/OAVM வசதி மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் தீர்மானங்களில் வாக்களிக்காத உறுப்பினர்கள் அல்லது அவ்வாறு செய்ய தடை விதிக்கப்படாத உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முறை மூலம் வாக்களிக்க தகுதியுடையவர்கள் ஆவர்.

வருடாந்திர பொதுக்கூட்டத்திற்கு முன்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் VC/ OAVM வசதி மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை கிடையாது.

கம்பெனியினால் மின்னணு முறையில் அறிவிப்பு அனுப்பிய பின்னர் கம்பெனியின் பங்குகளை பெற்று உறுப்பினரான நபர் மற்றும் கட் ஆப் தேதியன்று பங்குகளை வைத்துள்ளவர் evoting@nsdl.co.inக்கு கோரிக்கை அனுப்பி லாகின் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம். எனினும், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவிற்காக NSDL–லில் ஏற்கனவே பதிவு செய்திருந்தால், அவர் தற்போதைய உபயோக ஐடி மற்றும் பாஸ்வேர்டை வாக்களிக்க பயன்படுத்தலாம்.

கம்பெனி/டெபாசிட்டரியிடம் நீங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாதபட்சத்தில் மின்னணு வாக்குப்பதிவிற்கான லாகின் விவரங்கள் பெற கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு, மின்னஞ்சல் மூலமாக 2019–2020 வருடாந்திர அறிக்கை, தொலைதூர மின்னணு வாக்குப்பதிவிற்கான வழிமுறைகள் மற்றும் வாக்களிப்பிற்கான வழிமுறைகளை பெற, மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத உறுப்பினர்கள் அவற்றை கம்பெனியின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் M/s. இன்டக்ரேட்டட் ரிஜிஸ்திரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டின் https://www.integratedindia.in/emailupdation.aspxல் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கம்பெனி/டெபாசிட்டரியிடம் நீங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாதபட்சத்தில் மின்னணு வாக்குப்பதிவிற்கான லாகின் விவரங்கள் பெற கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

பிசிக்கல் ஹோல்டிங்	போலியோ எண், பங்குதாரர் பெயர், ஸ்கேன் செய்யப்பட்ட பங்கு சான்றிதழ் நகல் (முன் மற்றும் பின்பக்கம்) PAN (பான் கார்டின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்), AADHAR (ஆதார் அட்டையின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட ஸ்கேன் நகல்) ஆகியவற்றுடன் இமெயில் முகவரியை பதிவு செய்ய கம்பெனியின் பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவரான இண்டக்ரேட்டட் ரிஜிஸ்திரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், 2வது மாடி, கென்சஸ் டவர், எண். 1 ராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு தி.நகர், சென்னை 600 017 அவர்களுக்கு ஒரு கோரிக்கை அனுப்ப வேண்டும்.
டீமேட் ஹோல்டிங்	உங்கள் டிபி அறிவுறுத்திய செயல்முறையின்படி வைப்புத்தொகை பங்கேற்பாளரை (டிபி) தொடர்பு கொண்டு உங்கள் மின்னஞ்சல் முகவரியை உங்கள் டீமேட் கணக்கில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவிற்கான மேலும் விவரங்களுக்கு தயவு செய்து வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பினை பார்வையிட வேண்டும். தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு தொடர்பாக ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பிரிவு ("FAQs") மற்றும் உதவிப்பிரிவின் கீழ் www.evoting.nsdl.comல் உள்ள பங்குதாரர்களுக்கான மின்னணு வாக்குப்பதிவு கையேட்டை பார்வையிடலாம் அல்லது டோல் ப்ரீ எண். 1800-222-990ஐ தொடர்பு கொள்ளலாம் அல்லது evoting@nsdl.co.inக்கு ஒரு கோரிக்கை அனுப்பலாம். மின்னணு முறையில் வாக்களிப்பது தொடர்பாக ஏதேனும் சந்தேகம் இருப்பின் அது குறித்து Ms. பல்லவி@, NSDL, 4வது மாடி, 'ஏ' விங், டிரேட் வேர்ல்டு கமலா மில்ஸ் காம்பவுண்ட், சேனாபதி பாபட் மார்க், லோயர். பரேல், மும்பை 400 013 அல்லது மின்னஞ்சல்: evoting@nsdl.co.in Tel:91 22 2499 4545/1800-222-990ல் அணுகலாம்.

வருடாந்திர பொதுக்கூட்ட விவரங்கள் கம்பெனி இணையதளம் www.srisarvarayasugars.in NSDLல் www.evoting.nsdl.com, மற்றும் MSEI லிமிடெட் இணையதளம் www.msei.inல் கிடைக்கின்றன.

ஸ்ரீ சர்வராயா சுகர்ஸ் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/
(S B P P ராம்மோகன்)
இணை நிர்வாக இயக்குனர்

இடம் : சென்னை
தேதி : 02.09.2020

CG-VAK

SOFTWARE AND EXPORTS LIMITED.
AN ISO 9001:2015 CERTIFIED COMPANY
Regd Office: 171, Mettupalayam Road, Coimbatore 641 043, India
CIN: L30009TZ1994PLC005568 Phone: 91-422-2434491/92/93
Web:www.cgvak.com, Email Id:investorservices@cgvak.com

25வது வருடாந்திர பொதுகூட்டம் (AGM) மற்றும் மின்னஞ்சல் முகவரி மற்றும் வங்கி கணக்கு விவரங்களை உறுப்பினர்கள் சமர்ப்பிப்பதக்கான அறிவிப்பு

- தொடரும்COVID 19 தொற்றுகாரணத்தினால்,Ministry of Corporate Affairs (MCA) அதன் சுற்றறிக்கை எண் 14/2020, 17/2020 மற்றும் 20/2020 முறையே ஏப்ரல் 8, 2020, ஏப்ரல் 13, 2020 மற்றும் மே 05, 2020 தேதியிட்ட (MCA சுற்றறிக்கைகள்) உறுப்பினர்கள் நேரடியாககலந்து கொள்ளாமல், வீடியோ கான்பரன்சிங் (VC) பிற ஆடியோ விஷுவல் மீன்ஸ் (OAVM) வசதி மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தை (AGM) நடத்திக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது. நிறுவனங்கள் சட்டம், 2013 மற்றும் அதற்கான விதிகளின் விதிமுறைகளுக்கு இணங்க (SEBI மற்றும் MCA சுற்றறிக்கைகள் வழங்கிய மே 12, 2020 தேதியிட்ட SEBI/ HO /CFD /CMD 1 / CIR/ P / 2020/79)நிறுவனத்தின் 25 வது ஆண்டு பொதுக் கூட்டம் (AGM) 2020 செப்டம்பர் 30 புதன்கிழமை 3:00 PM மணிக்கு VC / OAVM மூலம் நடத்தப்படும்.
- 25 ஆவது வருடாந்திர அறிக்கை அந்தந்த Depository Participants (DP) / நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளஉறுப்பினர்களுக்கு மின்னணு முறை மூலம் அனுப்பப்படும். மேற்கண்ட ஆவணங்களை நிறுவனத்தின் வலைத்தளத்திலும் (www.cgvak.com) மற்றும் பங்குச் சந்தை வலைத்தளத்திலும் (BSE Ltd)(www.bseindia.com) பதிவிறக்கம்செய்துகொள்ளலாம்.
- நிறுவனம் 25வது AGMல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களிலும் வாக்களிக்க மின்னணுவாக்களிப்பு வசதி(AGM முன் மற்றும் AGMநடக்கும்போழுதும்) அதன் அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்குகிறது. AGMல் கலந்துகொள்வதற்கான விரிவான வழிமுறைகள், தொலை மின் வாக்களிப்பு மற்றும் AGM ல் மின்னணுவாக்களிப்பு மூலம் வாக்களிப்பது 25 வது AGM அறிவிப்பில் வழங்கப்படும்.

மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்வதற்கான வழிமுறைகள்

- ஆவண வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரிகள் பதிவு செய்யப்படாத உறுப்பினர்கள் FolioNo., பங்குதாரின் பெயர் மற்றும் தகுதியான பங்கு சான்றிதழின் மென்பிரதியுடன்(முன் மற்றும் பின் பக்கங்களைஇரண்டையும்) green@skdcconsultants.comக்குமின்னஞ்சல் மூலம் தேவையான விவரங்களை சமர்ப்பிப்பதன் மூலம் தங்கள் மின்னஞ்சல் ஐடிகளை பதிவு செய்யலாம்..
- DEMAT படிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரிகள் பதிவு செய்யப்படாத உறுப்பினர்கள் அந்தந்த Depository Participants (DP) தொடர்புகொள்வதன் மூலம் தங்கள் மின்னஞ்சல்முகவரியை பதிவு செய்யலாம்
- இவாக்களிப்பு மூலம் வாக்களிப்பதற்கான Login விவரங்கள் உறுப்பினர்களுக்கு (ஆவண படிவத்தில் / DEMAT வடிவத்தில் பங்குகளை வைத்திருத்தல்) இந்த நோக்கத்திற்காக பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிகளில் வழங்கப்படும்.

வங்கி கணக்கின் விவரங்களை புதுப்பிக்கும் முறை

- ஆவண வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள்இதற்குமுன்புECS வசதியைத் தேர்வு செய்யாத உறுப்பினர்கள், Folio No., பங்குதாரரின் பெயர் மற்றும் முகவரி, போன்ற விவரங்களைக் கொண்ட கோரிக்கைக் கடிதத்தை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வங்கி கணக்கின்விவரங்களைக் (வங்கி பெயர், கிளை முகவரி, வங்கி கணக்கு எண், IFSC Code) நிறுவனத்தின் RTA (Registrar and Transfer Agent)க்குஅனுப்பவும் SKDC Consultants Limited,KanapathyTowers, 3rd Floor, 1391/A1, Sathy Road, Ganapathy, Coimbatore 641 006 .ECS வசதியைப் பெறுவதற்காக, PAN (சுய கையொப்பமிடப்பட்ட நகல்) மற்றும் ரத்துசெய்யப்பட்டகாசோலையை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். DEMAT வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், வங்கி கணக்கு விவரங்களை அந்தந்த Depository Participants (DP) உடன் புதுப்பிக்க வேண்டும்.

சிஜிவேக் சாஃப்ட்வேர் மற்றும் எக்ஸ்போர்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்காக
Sd/
ஹார்ச்சரண். ஜெ
நிறுவனத்தின் செயலாளர்

இடம்: கோவை
தேதி : 01 செப்டம்பர், 2020

பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் ஆகிய திரு. மாலகொண்டைய்யா, வயது 50, த/பெ. N. வெங்கட்டைய்யா, எண்.17, பாரதி நகர், பொன்னியம்மன் மேடு, சென்னை - 600 110-ல் வசித்து வருகிறார். இவருக்கு சொந்தமான அசல் ஆவணம் வடசென்னை பதிவு மாவட்டம், ரெட்ஹில்ஸ் சார்பதிவு அலுவலகத்தில் 27.12.2013 தேதியன்று பதியப்பெற்ற கிரைய ஆவண எண்.14507/2013 ஆவணம் கடந்த 14.07.2020 அன்று சென்னை - 600 001, மண்ணடியில் வசித்து வரும் சபீர்பாய் என்பவரை விற்பனை சம்மந்தமாக சந்தித்து அசல் கிரையப்பத்திரத்தை காட்டிவிட்டு திரும்பும் சமயம், மினர்வா பேருந்து நிறுத்த அருகில் எனது இருச்சக்கர வண்டியின் பெட்டியில் இருந்து தொலைந்துவிட்டது. இதை கண்டெடுப்பவர் எனது முகவரியிலோ அல்லது எனது கட்சிக்காரரின் முகவரியிலோ ஒப்படைக்கவும். மேற்படி இந்த ஆவணத்தை கொண்டு எவரேனும் தவறான முறையில் பயன்படுத்தினால் எனது கட்சிக்காரரை கட்டுப்படுத்தாது.

(V. பார்த்திபன்)
வழக்கறிஞர்
நெ.4/22. 1வது தெரு,
கன்னிகாபுரம், சென்னை - 600 012.
செல் : 9884921079

லோட்டே இந்தியா கார்ப்பரேஷன் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 4/111, மவுண்ட் பூந்தமல்லி ரோடு, மணப்பாக்கம்,
சென்னை–600 089. தொலைபேசி: 044-4545 8888 ; FAX : 044-4545 8800;
E-mail: compsecy@lotteindia.com, Website: www.lotteindia.com
Corporate Identity Number : U15419TN1954PLC001987;

பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

கம்பெனியின் 65வது வருடாந்திர பொதுக்கூட்டம் திங்கட்கிழமை 28 டிசம்பர் 2020 அன்று காலை 10 மணிக்கு காணொளி காட்சி/இதர ஒளி ஒலி சாதனங்கள் மூலமாக நடைபெறுகிறது.

05.05.2020 தேதியிட்ட எம்சிஏ சுற்றிக்கை எண் 20/2020ன் தேவைக்கேற்ப, வருடாந்திர அறிக்கையை (வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு, இயக்குநர்கள் அறிக்கை மற்றும் நிதிநிலை அறிக்கை போன்றவை உள்ளடக்கியது) பங்குதாரர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்ப கம்பெனி திட்டமிட்டுள்ளது. வருடாந்திர அறிக்கை அனுப்பப்பட்ட நாளிலிருந்து கம்பெனியின் இணையதளத்தில் (www.lotteindia.com) வருடாந்திர அறிக்கை கிடைக்கும்.

மேலே உள்ள வழிமுறைகள் மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள விரும்பும் பங்குதாரர்கள் மற்றும் இதுவரை தங்கள் மின்னஞ்சல் முகவரியை கம்பெனி/ டிபி–யில் பதிவு செய்யாதவர்கள், 4 செப்டம்பர் 2020 அன்று மதியம் 12 மணிக்குள் அல்லது அதற்கு முன்னரோ URL https://investors.cameoindia.com/ஐ பார்வையிட்டு தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்ய வேண்டும்.

காகித/டிமேட் வடிவத்தில் பங்குகள் வைத்திருக்கும் பங்குதாரர்கள்/ கம்பெனி/ஆர்டிஏ/டிபி ஆகியவற்றில் தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாதவர்கள் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும் வருடாந்திர பொதுக்கூட்டம் கூட்டுவது பற்றிய அறிவிப்பில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு வழிமுறைகளை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

குழுவின் ஆணைப்படி
டி.ஜி. கார்த்திகேயன்
கம்பெனி செயலாளர்

தேதி: 02.09.2020
இடம்: சென்னை